1971 ஜூலை 5]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி யொன்றும் விதியில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் முஸ்லீம்களை இந்துக் கோயில்களில் நியமிப்பதில்லை என்று சொன்னார்கள். இந்துக்கள் முஸ்லீம் கோயில்களுக்குப் போகிறார்கள் என்பதை முதலமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது போன்ற வாரியங்களை நியமிப்பதற்கும் கோயில்களுக்குச் செல்வதற்கும் உள்ள வேறுபாட்டை உறுப்பினர் அவர்கள் அறிய வேண்டும்.

* 133 வினா திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுககு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, வக்ப் சொத்துக்களின் தற்போதைய மதிப்பு என்ன ?

(இ) வக்ப் பணத்தைக் கொண்டு ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட இருப்பது உண்மையா ?

(உ) எந்த ஊரில், எவ்வளவு தொகையில் கட்டப்பட இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) 1955-ம் ஆண்டு வக்ப் ஆணையாளரால் ஆய்வு செய்யப்பட்டதற்கு இணங்க வக்ப் சொத்துக்களின் மதிப்பு ரூ. 11,03,48,382 ஆகும். தற்போதைய அங்காடி மதிப்பை கணக்கில் கொண்டு பார்த்தால், இந்த சொத்தின் மதிப்பு 10 மடங்கு அதிகமாக இருக்கும்.

(இ) இல்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த ஏறக்குறைய நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை நிர்வகிக்கின்ற அந்த ஸ்தாபனம் திறமையாக இருக்க வேண்டுமென்று அரசு கருதுகின்ற காரணத்தினாலே வக்ப் போர்டு நியமிக்கப்பட்டது. சென்ற காலத்திலே தனி அதிகாரிகள் பொறுப்பில் அவை இருந்தபொழுது பல தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை அரசு அறியுமா ? அதைத் திருத்த என்ன நடவடிக்கைகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவான குற்றச்சாட்டாக இருக்கிறது. ஏதாவது தவறுகள் இருந்தால் அதைப்பற்றிய விவரங்கள் என்ன என்று சொல்ல வேண்டும், அதுதான் சட்டமன்றத்தின் மரபு. பொதுவாகச் செய்திருக்கிறார்கள், என்றால் அதற்கு அமைச்சர்கள் பதில் சொல்ல முடியாது. ஏதாவது குறிப்பிட்ட தவறு இருந்தால் சொல்லுங்கள். இந்தத் துணை வினா அனுமதிக்கப்படவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்த வக்ப் போர்டின்கீழ் இருக்கின்ற சொத்துக்கள் எல்லாம் எதற்கெல்லாம் பயன்படுத்தப் படுகின்றன? இந்துக்கள் அறநிலையச் சொத்துக்கள் கல்வி போன்ற சமூக நல வளர்ச்சிக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று அரசுத் தரப்பில் சொல்லப்படுகிறது. அதே போல் இந்தச் சொத்துக்களையும் அப்படிப்பட்ட காரியங்களுக்கும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரிலிஜியஸ் அன்ட் சாரிட்டபிள் பர்ப்பஸில் எந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப் பட வேண்டுமென்று ஏற்கனவே பத்திரங்களில் எழுதி வைக்கப் பட்டிருக்கிறதோ, அப்படிப்பட்ட காரியங்களுக்குத்தான் பயன் படுத்தப்படுகிறது. அந்த முறையிலேதான் வக்ப் போர்டும் செய்து வருகிறது.

திரு. கோவை செழியன் : வக்ப் போர்டு சார்பில் சென்னை நகரத்திலே ஏதாவது கல்லூரிகள் நடத்தப்படுகின்றனவா? அப்படியானால் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னையில் நடத்தப் படவில்லை. மதுரையில் நடத்தப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : முஸ்லீம்களின் மதச் சார்புள்ள வக்ப் போர்டு இந்துக்களின் அறநிலைய போர்டுகள் இரண்டும் இரண்டாக இருக்க• வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் இருக்கின்ற பணம் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பணம் ஒன்று சேரலாம் ; மனம் ஒன்று சேருவது இல்லையே, என்ன செய்வது ?

திரு. நா. வீராசாமி : கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் வக்ப் போர்டுக்குச் சொந்தமாக இருக்கிறது என்று சொன்னார்கள். வக்ப் போர்டுக்குச் சொந்தமான நிலங்கள் இந்துக் களால் இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்னமேயிருந்தே பயன் படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றன. அவர்கள் அதிலே பல கட்டடங்கள் எழுப்பியிருக்கிறார்கள். அவற்றைக் காலி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அதனால் இந்துக்கள் அங்கே பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அரசாங்கம் பரிசீலனை செய்து ஏற்கனவே கட்டடங்கள் கட்டப்பட்டுள்ள நிலங்களுக்கு உரிய கட்டணத்தை வாங்கிக் கொண்டு உரிமையாக்கிக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வக்ப் போர்டின் சொத்துகள் அதிகமாக இருந்தாலும் நாம் வருமானத்தைத்தான் பார்க்க வேண்டும். வருமானம் குறைவாகத்தான் வருகிறது. ஆறு சதவீதம்தான் வருகிறது. நீண்ட நாட்களுக்கு முன்னாலேயே வாடகைக்கோ குத்தகைக்கோ விடப்பட்டுவிட்ட காரணத்தினாலே

1971 ஜூலை 5]

வருமானம் குறைவாகத்தான் வருகிறது. முன்னாலேயே அப்படிச் செய்யப்பட்ட காரணத்தினால் வருமானம் குறைந்ததாக வருகிறது. இதிலே ஜாதி மதப் பிரச்சினை ஒன்றுமில்லை.

திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆறு சதவிதம் தான் வாங்கப்படுகிறது என்று சொன்னார்கள். சிறிய பள்ளிவாசல்கள் எல்லாம் கஷ்டப்படுகின்றன. எனவே ஆறு சதவிதம் என்பதை இன்னும் குறைக்க ஏதாவது எண்ணம் உண்டா? அல்லது சிறிய பள்ளிவாசல்கள் போன்றவற்றிற்கு அரசாங்கம் மானியம் கொடுத்து உதவ முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆறு சதவிதம் என்பதுவே குறைந்த வருமானம் என்று நான் சொல்லும்பொழுது கனம் உறுப்பினர் அவர்கள் குறைக்க வேண்டுமென்று சொல்வது நியாயமல்ல. அரசாங்கம் மத சம்பந்தமாக மானியம் எதுவும் கொடுப்பதில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: வக்ப் போர்டு பணம் முஸ்லீம் ஆர்பனேஜஸ் இருக்கின்றனவே அவற்றிக்குக் கொடுக்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பொதுவாக தர்ம சம்பந்தமான காரியங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. முன்னாலே மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. வருகின்ற வருமானத்தை அனுசரித்துச் சில ஆர்பனேஜஸ்களுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஏ. எம். இராஜா: வக்ப் போர்டு சொத்துக்கள் 10 மடங்கு அதிகப்பட்டிருக்கிறது. ஆனால் வருமானம் மட்டும் ஆறு சதவிதம் மட்டும் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். வருமானத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் உடனடியாகத் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அவ்வளவு சாதாரணமான காரியமல்ல அது. 100 கோடிக்குச் சொத்து இருந்தாலும் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ கொடுக்கப்பட்டிருக்கிறது. முனிஸிபல் வரி, இஸ்திபோக 6 சதவிதம்தான் கிடைக்கிறது. வருமானத்தைப் பெருக்க வக்ப் போர்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும் என்று நினைக்கிறேன்.

திரு. க. உரோ. எட்மண்ட்: வக்ப் போர்டு சொத்துக்கள் ரிலிஜியஸ் அன்ட் சாரிட்டபிள் பர்ப்பஸுக்கு என்று பயன்படுத்தப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, சாரிட்டீஸ் என்ற அடிப்படையில் அனாதைகளைப் பராமரித்தல், குஷ்டரோகி ஆஸ்பத்திரிகள் கட்டுதல், மருத்துவ மனைகள் கட்டுதல் போன்றவற்றிக்குப் பயன்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தும் அதில் அடங்கும்.

திரு. எம். செல்வராஜ் : நம்முடைய அமைச்சர் அவர்கள் மதிப்பு உயர்ந்திருக்கிறது, வருமானம் உயரவில்லை என்று சொன்னார்கள். மதிப்பு உயர்ந்திருக்கும்போது வருமானம் படிப்படியாக உயரத்தானே செய்யும். என்ன காரணத்தால் வருமானம் உயரவில்லை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பத்து கோடி என்று சொன்னது 'புக் வால்யு'. இன்றைய மார்க்கட் நிலவரப்படி பத்து மடங்கு அதிகமாக இருக்குமென்று சொல்லப்படுகிறது. பத்தாயிரம் ரூபாய்க்குக் குத்தகைக்குக் கொடுத்திருந்தால், அந்தக் குத்தகையை ஏற்றுவது சுலபமான காரியம் அல்ல. இப்போது அமைக்கப்பட்ட போர்டு அந்தக் காரியங்களைச் செய்யும் என்று நம்புகிறேன்.

Visit of Atomic Team from Japan to Tamil Nadu

* 134 Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether any Atomic Team from Japan came to this State on or about the 28th January 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) ஆம். டாக்டர் ஹோரோ இணை தலைமையில் ஜப்பானிய நாட்டு அணு சக்தித் தொழில் பிரதிநிதிக் குழுவினர் 1971-ம் ஆண்டு ஜனவரி-பிப்ரவரி மாதத்தில் இந்நாட்டிலுள்ள அணுசக்தித் துறையைப் பார்வையிட்டனர். இக்குழு 1971 ஜனவரி 23-ம் நாளன்று சென்னை அணுமின் சக்தித் திட்டத்தைப் பார்வையிட்டது. அணுசக்தித் துறையில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றத்தை அவர்கள் ஆராய்ந்து அறிந்துகொள்ளவும் இருதரப்பாருக்கும் இடையே பயனுள்ள விவாதங்களை நடத்தவும் அணுசக்தி ஆணைக்குழுத் தலைவரின் அழைப்பின் பேரில் இக்குழு இந்தியாவிற்கு வருகை தந்தது.

திரு. எ. சுவாமிதாஸ் : ஜப்பானில் இருந்து வந்த அணு ஆராய்ச்சிக் குழுவினர் தங்கள் கருத்தை இந்த அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மத்திய அரசிடம் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த ஆண்டு அந்த ஆராய்ச்சிக் குழு எங்கெல்லாம் சென்றது? அணு உற்பத்தி செய்வதற்குத் தேவையான மோனேசைட், இல்மினைட் போன்ற பொருள்கள் கன்னியாகுமரி ஜில்லாவில் கிடைக்கின்றன. அங்கு இந்தக் குழுவை அனுப்பி பரிசீலனை செய்யப்பட்டதா?